<u>DEPOSITION OF WITNESS</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>

<u>IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR</u>

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 3

| | | |
|---|---|---|
| Name | …. | Sudhakar |
| Father's Name | .... | Muthu |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 07th day of August 2025.

( எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் பலகண்டபுரத்தில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1, 2 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 02.11.2013 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு களத்து மேட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி பட்டாசு வெடித்தார். பட்டாசு வெடித்து அ.சா. 1ம் மீது பட்டது. அதன்பிறகு கைகளப்பு ஆகிவிட்டது. அதனால் அ.சா.1ஐயும், எதிரியையும் சண்டையை விளக்கிவிட்டு அனுப்பிவிட்டோம். மறுநாள் காலை 4.00 மணிக்கு வெட்டிவிட்டதாக தகவல் தெரிந்தது. சம்பவத்திற்கு பிறகு ஆம்புலன்ஸ் மூலம் அவர்களே செய்யாறு அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். அதன்பிறகு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்றதாக சொன்னார்கள். அதன்பிறகு சென்னை ராஜீவ்காந்தி அரசு

மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். நான் மேற்படி சிகிச்சையிலிருந்த அ.சா.1ஐ சென்று பார்த்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 2

| | | |
|---|---|---|
| Name | …. | Raviyammal |
| Father's Name | .... | Vellikannan |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 07th day of August 2025.

( எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் பலகண்டபுரத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1ஐ தெரியும். அவர் என்னுடைய மகன் ஆவார். 2013 ஆம் ஆண்டு தீபாவளி அன்று காலை 6.00 மணிக்கு எங்கள் வீட்டில் அருள் ஆஜர் எதிரி வந்து கத்தியால் என் மகனை இடது காது மற்றும் கழுத்தின் அருகில் வெட்டிவிட்டார். 02ஆம் தேதி தீபாவளி மாதம் என் மகனுக்கும் ஆஜர் எதிரிக்கும் ஏதோ தகராறு ஆனால் அது என்ன தகராறு என்று எனக்கு தெரியாது. அதன்காரணமாக என் மகனை அருள் வெட்டிவிட்டார். அதன்பிறகு எதிரி சத்தம் போடவே ஓடிவிட்டார். பிறகு என் மகனை செய்யாறு அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்து சென்றோம். அதன்பிறகு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அதன்பிறகு

சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 35/2020

Prosecution witness PW - 1

Name …. Parthi @ Partthiban

Father's Name ....

Village ....

Taluk ....

Caste ....

Calling ....

Religion ....

Age ….

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 07th day of August 2025.

( எதிரி ஆஜர்)

முதல் விசாரணை

நான் பலகண்டபுரத்தில் வசித்து வருகிறேன். நான் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 02.11.2013 அன்று மாலை 6.00 மணிக்கு களத்துமேட்டில் நான், சுதாகர், அசோக் மற்றும் விமல், ஆகியோர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ராஜகோபால் மகன் அருள் பட்டாசு வெடித்துக்கொண்டிருந்தார். அப்போது தள்ளிபோய் வெடிக்குமாறு சொன்னோம். அப்போது மீண்டும் அதே இடத்தில் வைத்த வெடி என்மேலும் மற்றும் உடனிருந்தவர்கள் மேலும் பட்டது. தேவிடியா பையான என அசிங்கமான வார்த்தையால் என்னை திட்டினார். பின்பு அருள் எனது வலது பக்க முகத்தில் கையால் அடித்துவிட்டார். நான் வீட்டிற்கு சென்று படுத்துவிட்டேன். அதன் பிறகு 03.11.2013 அன்று விடியற்காலை 3.10 மணிக்கு என்னை அருவாளால் முகத்தில்

வெட்டினார். அது என்னிடம் காட்டப்படும் அருவாளால் தான் என்னை எதிரி வெட்டினார். அது. **சா.பொ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இடதுபக்க காது மற்றும் கண்ணிற்கு கீழ் வெட்டுகாயம் ஏற்பட்டது. அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் செய்யாறு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அதன்பின்பு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அதன்பின்பு 15 நாட்கள் உள்நோயாளியாக சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது **அ.த.சா.ஆ.** 1ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

இல்லை. (வழக்கறிஞர் ஆஜர்)